1. முந்தைய சில நாட்களுக்கான பேரவை நடவடிக்கைக் குறிப்புகளின் சில பகுதிகளை நீக்கக் கோருதல்– பேரவைத் தலைவரின் தீர்ப்பு—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நேற்றையதினம் நிதிநிலை அறிக்கைமீது நடந்த விவாதத்தின்போது தி.மு.க. உறுப்பினர்கள் சட்டம்–ஒழுங்கு பற்றிப் பேசியதற்கு பதிலாக மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் திருவாரூரில் நடைபெற்ற தி.மு.க. உறுப்பினர் ஒருவரின் கொலை சம்பந்தமாகக் கூறினார். அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று அவர்கள் கோரினார்கள். நான் அதைப் படித்துப் பார்த்துவிட்டு பிறகு எனது தீர்ப்பைச் சொல்கிறேன் என்றும், அதுவரை பத்திரிகைகள் இதுகுறித்து செய்தி எதுவும் வெளியிட வேண்டாம் என்றும் நேற்றைக்கு உத்தரவிட்டிருந்தேன். நான் அவைக் குறிப்புகள் அனைத்தையும் வாங்கி, தீவிரமாக அவற்றைப் பார்வையிட்டு பரிசீலித்தேன். அவ்வாறு பரிசீலித்ததில், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் அந்த வழக்கிற்குக் குந்தகம் விளைவிக்கிற மாதிரி எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் முழுக்க, முழுக்க தி.மு.க. ஆட்சியிலே இருந்த சட்டம்-ஒழுங்கைப் பற்றித்தான் விமர்சனம் செய்திருக்கிறார்கள். ஆகவே, அவர் வழக்கிற்கோ, வழக்கிற்கு குந்தகம் விளைவிக்கிற மாதிரியோ எதுவும் பேசவில்லை என்கிற காரணத்தினால், அவைக் குறிப்பிலிருந்து மாண்புமிகு அமைச்சர் பேசியது எதையும் நீக்கத் தேவையில்லை என்று நான் தீர்ப்பு அளிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 11-50

அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு அவர்கள் பேசுகிறபொழுது, இந்த budget-*ஐ பற்றி சில விமர்சனங்கள் வெளியில் வந்ததை உரையிலே குறிப்பிட்டார்கள். அது ஏற்கெனவே தி.மு.க. உறுப்பினர்களால் பத்திரிகைகளுக்கு செய்தியாக கொடுக்கப்பட்ட விவரங்களைத்தான், மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு அவர்கள் இங்கே பேசினாரே ஒழிய, அதற்கு மாறான வாதங்களை, தவறான வாதங்கள் எதுவும் இந்த அவையிலே சொல்லவில்லை என்கிற காரணத்தினால்,*

அதையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கத் தேவையில்லை நான் தீர்ப்பு அளிக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. இராஜன் செல்லப்பா அவர்கள் பேசுகிறபொழுது சர்க்காரியா கமிஷன் பற்றி குறிப்பிட்டார்கள். சர்க்காரியா கமிஷன் என்பது பலமுறை இந்த அவையிலே விவாதித்து, அது அவைக் குறிப்பிலே இடம் பெற்றிருக்கிற காரணத்தினாலே அந்த விவாதத்தையும், அவர் சொல்லிய கருத்தையும் அவைக் குறிப்பில் இருந்து நீக்கத் தேவையில்லை என்பதை நான் என்னுடைய தீர்ப்பாக, தெளிவாகத், தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* அவை மரபுகளுக்கு மாறாக, விதிகளுக்குப் புறம்பாக, அவையில் பேசுவதைத் தவிர்க்கப்பட வேண்டிய சொற்களாக இவர்கள் பேசியது இல்லாததாலும், ஏற்கெனவே இதுபோன்ற முன்மாதிரிகள் உள்ளதாலும், அவற்றை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டிய அவசியம் இல்லை என்று உத்தரவிடுகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 1-8-2016 திங்கட்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை முற்பகல் 11-51 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

-ஏதுமில்லை-

*****